வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3434/அ3/2023 நாள். 11.06.2024
---

பொருள் : பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி – வேலூர் மாவட்டம், அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்து **பணிநிரவல் மாறுதல் கலந்தாய்வில் கலந்துக் கொண்டு மாறுதல் ஆணை பெற்ற ஆசிரியர்களின் பணியிடம் சார்ந்த விவரங்கள் அனுப்புதல்** – தொடர்பாக.

பார்வை :
1. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.48800/சி3/இ1/2023 நாள்.30.05.2024.
2. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.04174/W2/இ3/2023 நாள்.31.05.2024.
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்.03.06.2024.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்.06.06.2024.

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/ நகரவை/உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்து பணிநிரவல் கலந்தாய்வு 11.06.2024அன்று நடைபெற்றது. பணிநிரவல் கலந்தாய்வில் கலந்துக் கொண்டு **மாறுதல் ஆணை பெற்ற ஆசிரியர்களின் பணியிட விவரங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் இணைப்பிலுள்ள விவரங்களை பதிவிறக்கம் செய்து கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணியிடத்துடன் பணிநிரவல் (Need Post) செய்யப்பட்ட விவரத்தை பள்ளியின் அளவுகோள் பதிவேட்டில் (Scale Register) பதிவு செய்து, அசல் அளவுகோள் பதிவேடு மற்றும் தலைமையாசிரியர் கையொப்பமிட்ட நகல் ஒன்றினை நாளை (12.06.2024) மாலை 04.00மணிக்குள் இவ்வலுவலகத்தில் தனிநபர் மூலம் சரிபார்த்து சமர்ப்பிக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – படிவம் (Subject Wise)

// ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்,
சார்ந்த தலைமையாசிரியர்கள்
அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.